VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# குறள் சுட்டும் குடும்பம்

**திருமதி மா.முத்து காயத்ரி**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
muthugayathri-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.14788503.

**Abstract :**

Society is a noble organization where people live together. The development of a country depends on the activities of its people. The most ancient group organization among the groups of people is the family. The family is the lifeblood and the theme of society. A family refers to an organization where some or many people live together. In particular, a family is a collective organization where a man and a woman live together with their children. This article aims to explain the advice given by the Thirukkural, known as the Universal Secret, on the responsibilities and duties of the headman and the headwoman in the noble family system that put an end to the irregular relationship that existed in the early days and established order.

**Key Words** : Thirukural - Society - Family Structure

## முன்னுரை

சமுதாயம் என்பது மக்கள் கூடி வாழும் ஓர் உன்னத அமைப்பாகும். ஓர் நாட்டின் வளர்ச்சியானது அந்நாட்டு மக்களின் செயல்பாடுகளைச் சார்ந்தே அமைகிறது. மக்கள் குழுக்களில் மிகத் தொன்மையான குழு அமைப்பு குடும்பமே ஆகும். சமூகத்தில் உயிர்நாடியாகவும், கருப்பொருளாகவும் இருப்பது குடும்பமே. குடும்பம் என்பது, சிலரோ பலரோ கூடி வாழும் அமைப்பைக் குறிக்கும். குறிப்பாக ஓர் ஆணும் பெண்ணும் தன் பெற்ற சேயுடன் சேர்ந்து வாழும் கூட்டு அமைப்பே குடும்பம். தொடக்க காலத்தில் இருந்த வரைமுறையற்ற உறவுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒழுங்குமுறையை ஏற்படுத்திய மேன்மை பெற்ற குடும்ப அமைப்பில் தலைவன் தலைவிக்கு இருக்க வேண்டிய பொறுப்புகள், கடமைகள் குறித்து உலகப்பொதுமறை என்றழைக்கப்படும் திருக்குறள் சுட்டும் அறிவுரைகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## குறள் சுட்டும் குடும்பம்

குடும்பம் என்பதற்கு இல்லறம் என்னும் பெயருண்டு. இல் + அறம் என்பதே இல்லறம். வீட்டிலிருந்து அறவாழ்கையை மேற்கொள்வதாகும். கணவன், மனைவி மற்றும் மக்கள்பேறு என்ற மூன்று உறுப்பினரும் இருந்தால் தான் இல்லறமாகிய அறவாழ்க்கையைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும். திரு.வி.க. அவர்கள் 'இல்லறம்' என்ற சொல்லுக்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

**“அறம் என்பது ஒரு மரம் போன்றது. திருமணம் பிள்ளைப்பேறு. அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்பரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, மெய்யுணர்வு முதலியன**


http://Creativecommons.org//license/by/4.0/.

**அம்மரத்தில் உறுப்புக்களாகிய வேர், பட்டை, கவடு, கோடு, விளார்,தவிர், இலை, மலர், காய். கனி முதலியன போன்றன. இவ்வறக் கூறுகள் யாவும், பிறந்து வளர்ந்து பயனளிக்க வேண்டிய தாயகம் இல்லறமாகும்.”[1]**

குடும்ப வாழ்க்கையில் ஈடுபடக்கூடிய குடும்பத் தலைவன் தலைவியின் கடமைகள், தலைவியின் முக்கியத்துவம், பண்புகள், மக்கள் பேற்றின் சிறப்புகள் ஆகியவற்றை திருக்குறள் படம்பிடித்துக் காட்டுகிறது.

**இல்வாழ்வோர் பண்புகள்**

இல்லறத்தில் முதன்மை வகிப்பது கணவன் மனைவி உறவு நிலை. இவர்கள் இருவரும் ஒரு வண்டியின் இரு சக்கரம் போன்றவர்கள். வண்டியின் ஒரு சக்கரம் பழுதடைந்து விட்டால் அவ்வண்டி எப்படி பயன்தராதோ அதேப்போல் கணவனோ மனைவியோ ஒழுங்கற்று பொறுப்பற்றுப் போனால் இல்லற வாழ்வு அழகற்று போகும். இருவரும் அன்புடன் ஒற்றுமையாய் இருந்தலே நன்று என வள்ளுவர் உரைப்பதை,

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.”[2]**

என்ற குறள் தெளிவுப்படுத்துகிறது. மேலும் கணவனும் மனைவியும் இணைந்து, வாழ்ந்து மறைந்த முன்னோர்களையும் நம்மைக் காக்கும் தெய்வத்தையும் வீட்டிற்குப் புதிதாய் வரும் விருந்தினரையும் உறவினர்களையும் தன்னையும் தன் குடும்பத்தையும் பேணிப்பாதுகாத்து கொள்ளல் வேண்டும். இதுவே இருவரின் கடமைகள் என்பதை,

**“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.”[3]**

என்ற குறள் சுட்டுகிறது.

**விருந்தோம்பல் பண்பு**

இல்லற வாழ்வில் தலையாயது விருந்தோம்பல் பண்பு. விருந்து என்னும் சொல்லுக்குப் ‘புதுமை’ என்று பொருள் சுட்டுகிறார், தொல்காப்பியர். இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும். இதில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானது. முகம் மலர்ந்து உபசரிக்கும் போது விருந்துப்பொருள் உப்பில்லாத கூழாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும்.

**“ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மைபேசி**
**உப்பில்லாத கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்” [4]**

என்று விவேக சிந்தாமணி விளக்குவதை,

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து” [5]**

என்ற குறள் வழி வள்ளுவரும் சுட்டுகிறார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**இல்லாளின் முக்கியத்துவம்**

மனைவி என்பவள் இல்லத்திற்கு அழகு சேர்ப்பவள். இவள் சிறந்த பண்புகளுடனும் தன் கணவனின் வளமைக்குத் தகுந்தபடி நடந்து இல்லறத்தை நல்லறமாக மாற்றல் வேண்டும். நல்ல குணமும் நல்ல செயல்களும் மனைவியிடம் இல்லாமற் போனால் அவ்வாழ்க்கை எத்தனை சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் அது பயனற்று போவதை,

**“மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்”[6]**

என்ற குறள் வழி அறியலாகின்றது.

**மக்கட்பேறு**

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் சங்ககால பலதாரமுறை மாறி ஒருதார மணமுறை நிலவியது. இதனால் தந்தையின் உரிமைகள் சொத்துக்கள் தந்தைக்கு பிறகு முறைப்படி வாரிசுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இல்வாழ்வில் ஒருவனுக்கு நற்குணங்கள் நிறைந்த மனைவி அமைதல் வாழ்க்கை அழகாகும். அந்த அழகிற்கு நல்ல அணிகலனாக திகழ்வது பிள்ளைச்செல்வம் மட்டுமே ஆகும்.

**“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு.”[7]**

என்ற குறட்பா மக்கட்பேற்றின் சிறப்பினை விளக்குகிறது.

ஒரு பெற்றோர்க்கு குழந்தை பெற்றால் மட்டும் கடமை முடிந்துவிடாது. அக்குழந்தைகளை நன்முறையில் வளர்த்து கல்விச்செல்வத்தை தந்து வாழ்க்கையில் முன்னேறச் செய்தல் வேண்டும். இதுவே தந்தையின் தலையாயக் கடமையாகும் என்று வள்ளுவர் அறிவுறுத்துவதை,

**“தந்தை மகற்காற்று நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.”[8]**

என்ற குறட்பா சுட்டுகிறது.

பெற்றோர்க்கு மட்டுமின்றி பிள்ளைகளுக்கு சில கடமைகள் உண்டு என திருக்குறள் சுட்டுகிறது. அவை, பெற்றோரின் வழி நடந்து நன்முறையில் முன்னேறி பிறர் போற்றுமாறு மரியாதையுடனும் புகழுடவுனும் தன்னைப் பெற்ற பெற்றோருக்கு பெருமை உண்டாகும் படி வாழ்தல் வேண்டும். இது தான் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் என வள்ளுவர் கூறுவதை,

**“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.”[9]**
**“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்”[10]**

என்ற குறட்பா மூலம் அறியலாகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**முடிவுரை**

குடும்பம் என்பது அன்பாலும் பண்பாலும் கட்டடைக்கப்பட்டுள்ளது. இல்லறம் சிறந்து விளங்க, இல்வாழ்வோரான கணவன் மனைவி பிள்ளைகள் ஆகியோர் தனக்குரிய கடமைகளைச் செய்து சிறந்து விளங்க வேண்டும் என வள்ளுவர் உலகப்பொதுமறையான திருக்குறளில் எடுத்தியம்புவதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. திரு.வி.கல்யாணசுந்தரம், பெண்ணின் பெருமை(அ) வாழ்க்கைத்துணை, ப.203.
2. திருவள்ளுவர், திருக்குறள், இல்வாழ்க்கை, குறள்45.
3. மேலது, குறள்43.
4. விவேக சிந்தாமணி, பா.3.
5. திருவள்ளுவர், திருக்குறள், விருந்தோம்பல், குறள்90.
6. திருவள்ளுவர், திருக்குறள், வாழ்க்கைத்துணைநலம், குறள்52.
7. மேலது, குறள்60.
8. திருவள்ளுவர், திருக்குறள், மக்கட்பேறு, குறள்67.
9. மேலது, குறள்69.
10. மேலது, குறள்70.


http://Creativecommons.org//license/by/4.0/.